بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 03/11/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**✪தஹ்ரீகே ஜதீதின் ஆறாம் அலுவலக பதிவேட்டின் அருளுக்குரிய துவக்கம்**
**✪தஹ்ரீகே ஜதீதின் 89 ஆம் ஆண்டில் ஜமாஅத்தினர்கள் சார்பாக செய்யப்பட்ட பொருள் தியாகங்களின் குறிப்பும், 90 ஆம் ஆண்டின் துவக்கம் குறித்த அறிவிப்பும்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰی تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ ۬ؕ وَ مَا تُنۡفِقُوۡا مِنۡ شَیۡءٍ فَاِنَّ اللّٰہَ بِہٖ عَلِیۡمٌ ﴿۹۳﴾

நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் நன்மையினைப் பெறமுடியாது. நீங்கள் எதை செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். **(திருக்குர்ஆன் 3:93)**

நீங்கள் இறைவிருப்பத்தைப் பெறுவதற்காக உங்களுக்கு விருப்பமானவற்றை அல்லாஹ்வுடைய வழியில் செலவழிக்கும் போதுதான் நன்மையின் உயரிய தரம் உங்களுக்குக் கிடைக்கும் என்பதை அல்லாஹ் இந்த வசனத்தில் தெளிவாகக் கூறிவிட்டான். இதை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“நீங்கள் இறைவழியில் உங்களுக்கு விருப்பமான பொருள்களை செலவு செய்யாதவரை இரட்சிப்பு வரை கொண்டு சேர்க்கின்ற அந்த உண்மையான நன்மையினை நீங்கள் பெற முடியாது!”

பிறகு இன்னோரிடத்தில் அன்னார் கூறுகிறார்கள்: “செல்வத்துடன் நேசம் வேண்டாம்! அல்லாஹ் கூறுகின்றான்; நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து இறைவழியில் செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் நன்மையினைப் பெறமுடியாது.”

அன்னார் கூறுகிறார்கள்: பயனற்ற, வீணான பொருள்களை செலவு செய்வதால் ஒரு மனிதன் நன்மையை செய்வதாக வாதிக்க முடியாது! நன்மையின் வாசல் குறுகலானதாக உள்ளது. நன்றாக நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்! வீணான பொருள்களை செலவு செய்வதால் எவரும் அதில் நுழைய முடியாது.

ஏனென்றால் விருப்பத்திலும் விருப்பமான, நேசத்திலும் நேசமான பொருளை செலவு செய்யாதவரை இறைவனுக்கு விருப்பமானவர் என்ற அந்தஸ்தைப் பெற முடியாது. துன்பத்தை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்றால், உண்மையான நன்மையினை மேற்கொள்ள விரும்பவில்லை என்றால், எவ்வாறு வெற்றி பெற முடியும்? நோக்கத்தை அடைய முடியும்? சஹாபா பெருமக்களுக்குக் கிடைத்த அந்த அந்தஸ்தை அவர்கள் இலவசமாகப் பெற்றுவிட்டார்களா என்ன? விஷயம் என்னவென்றால், தற்காலிக

சிரமங்களைப் பொறுத்துக் கொள்ளாத வரை உண்மையான மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற இறைதிருப்தி கிடைக்க முடியாது! இறைவன் ஏமாறுவதில்லை! இறை விருப்பத்தைப் பெறுவதற்காக சிரமங்களைப் பற்றி கவலைப்படாதவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவார்கள். ஏனென்றால் நிரந்தர மகிழ்ச்சியும், நிரந்தர நிம்மதியின் ஒளியும் இந்தத் தற்காலிக சிரமத்திற்குப் பிறகுதான் நம்பிக்கையாளருக்குக் கிடைக்கிறது.

ஆகவே செல்வத்தை செலவு செய்கின்ற இந்தப் புரிதலைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இறை வழிகாட்டலுக்கேற்ப நம்மிடையே உருவாக்க விரும்பினார்கள். எவர்கள் இவ்விஷயத்தைப் புரிந்தார்களோ தம் செல்வத்தை மார்க்கத்தின் வழியில் செலவு செய்தார்களோ, இது ஜமாஅத்தின் மீதும் ஒவ்வோர் அஹ்மதியின் மீதும் அல்லாஹ் செய்த மிகப்பெரும் பேரருள் ஆகும்.

தம் தேவைகள் இருந்தபோதிலும் மார்க்கத் தேவைக்காக தம் செல்வத்தை எடுத்து வைத்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் நம் ஜமாஅத்தில் உள்ளனர். ஆயிரக்கணக்கான உதாரணங்கள் உள்ளன. உலகின் பொருளாதார நிலை பொதுவாக மோசமாகிக் கொண்டே செல்வதைத் தற்காலத்தில் நாம் பார்க்கிறோம். குறிப்பாக முன்னேற்றமடைகின்ற நாடுகளில் இதைக் காண்கிறோம். முன்னேற்றமடைந்த நாடுகளைப் பார்க்கும் போதும், அவர்களின் நிலையும் நல்லவிதமாக இப்பொழுது இல்லை. உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போரும் சூழ்நிலையை ஓரளவுக்கு மோசமாக்கிவிட்டது. பிறகு அந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளின் ஊழல்களும் மிக மோசமான நிலையை உருவாக்கி விட்டன. ஆனால் அவ்வாறிருந்தும் கூட அஹ்மதிகள் தம் பொருள் தியாகத்தில் முன்னேறிக்கொண்டே செல்கின்றனர். ஓர் உலகவாதியின் பார்வையில் இதைப் புரிந்து கொள்வது மிக கஷ்டமாகும். ஆனால், இந்தத் தியாகங்கள் எதற்கென்றால் இதன் விளைவாக அல்லாஹ்வின் அருள்கள் தென்படுகின்றன என்பது உறுதியான நம்பிக்கை கொண்டவர்களுக்குத் தெரியும்.

நவம்பருடைய முதல் வாரத்தில் தஹ்ரீகே ஜதீதுடைய புதிய வருடத்தின் அறிவிப்பு செய்யப்படுகிறது. ஆகவே தஹ்ரீகே ஜதீது தொடர்பாகவே சில விஷயங்களை நான் எடுத்து வைப்பேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீதை அறிவித்த போது அந்நேரத்தில் அவர்கள் எடுத்து வைத்த கோரிக்கைகளில் ஒன்று, பெண்களுடைய தியாகம் தொடர்பானதாகவும் இருந்தது. அதாவது, நீங்கள் நகைகளை வாங்காதீர்கள் என்றோ அல்லது குறைவாக வாங்குங்கள் என்றோ கூறப்பட்டது. நீங்கள் தியாகங்கள் செய்யுங்கள் என்று கூறப்பட்டது. அப்பொழுதும் பெண்கள் தியாகங்கள் செய்தார்கள்; இப்பொழுதும் செய்து வருகிறார்கள். சில பெண்கள் தம் எல்லா நகைகளையும் கொடுத்து விடுகிறார்கள்.

ஏழைகள் தம் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி சந்தாக்கள் கொடுக்கிறார்கள். இவ்வாறான பல மக்களுக்கு அல்லாஹ் உடனடியாக வழங்கியும் விடுகின்றான். செல்வந்தர்களுக்கும் நான் கூறிக் கொள்வது என்னவென்றால், அவர்களும் இதிலிருந்து பாடம் பெற வேண்டும்; தம் தியாகங்களின் தரத்தை உயர்த்த வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஏழை மக்கள் எவ்வாறும் உள்ளார்கள் என்றால், அவர்கள் தம் ஒரு மாத வருமானத்தில் 45 சதவீதத்தை சந்தவாகக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் செல்வந்தர்கள் ஒன்றரை சதவீதம் மட்டுமே கொடுக்கிறார்கள். இன்னும் கூறுவதென்றால், இப்பொழுது ஏழைகளில் 100% கொடுக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள். ஆனால் செல்வந்தர்களோ ஒரு சதவீதம்தான் கொடுக்கிறார்கள். ஆக இந்த வகையில் பார்க்கும்போது, ஏழைகளுடைய தியாகத்தின் தரம் மிக உயர்ந்ததாக உள்ளது. செல்வ செழிப்புள்ள மக்களும் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்! நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ் ஒருபோதும் கடனை வைத்திருப்பதில்லை. 700 மடங்காகக் கொடுப்பதாகவும் அல்லது அதைவிட அதிகமாகக் கொடுப்பதாகவும் இன்னோரிடத்தில் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கினி பஸாவு, ஃபிஜி, மலாவி, தன்ஸானியா, நைஜீரியா போன்ற சில நாடுகளில் தஹ்ரீகே ஜதீதின் மைதானத்தில் தியாகம் செய்யக்கூடியவர்களின் சில சம்பவங்களை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:*

ஜமாஅத்தின் எதிரிகள் ஜமாஅத்தை அழிப்பதற்குக் கடினமாக முயற்சித்துக் கொண்டிருந்தது எங்கே? (இன்னொரு பக்கம்) அல்லாஹ் புதிய அஹ்மதிகளின் உள்ளங்களில் ஜமாஅத்திற்காகத் தியாகத்தின் உணர்வை உருவாக்கியதைப் பாருங்கள்! பிறகு அவன் அவர்களுக்கு வழங்கவும் செய்கின்றான். எதிரிகள் ஊதியணைப்பதால் அல்லாஹ் ஏற்றிய இவ்விளக்கு அணைந்து விடுமா என்ன? அவர்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அழுத்தம் கொடுக்கட்டும். தோல்வி மட்டுமே எதிரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது. உலகின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலெல்லாம் ஜமாஅத் தியாகங்களின் உதாரணத்தை நிலைநாட்டியவாறு முன்னேறிக் கொண்டே செல்கிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீது திட்டத்தை ஆரம்பித்ததற்கு காரணமே என்னவென்றால், ஜமாஅத்துக்கு எதிராக எல்லாப் புறமும் எதிர்ப்பு இருந்தது. எந்த அளவுக்கு என்றால், அரசாங்க அதிகாரிகளும் எதிரிகளுக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்தார்கள். தப்லீக் செய்து ஜமாஅத்தை வளர்க்க வேண்டும்; உலகின் ஒவ்வொரு நாட்டிலும் ஜமாஅத்தின் மூலமாக இஸ்லாத்தின் கொடி பறக்க வைக்க வேண்டும் என்பதே தஹ்ரீகே ஜதீதுடைய நோக்கமாகும். ஆகவே அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமாக இஸ்லாத்தின் மடிக்குள் வந்துள்ள இம்மக்கள் ஈமான் மற்றும் தியாகத்தின் முன்னுதாரணங்களை நிலை நாட்ட முயற்சி செய்து வருகிறார்கள். எண்ணிலடங்கா சம்பவங்கள் உள்ளன! ஆனால் அவை அனைத்தையும் தற்போது இங்கு எடுத்துக் கூற இயலாது.

தஹ்ரீகே ஜதீது தொடர்பாக கூடுதலாக அதனுடைய வரலாற்று பின்னணியைக் குறித்தும் நான் கூறி விடுகின்றேன். ஜமாஅத்திற்கு எதிராக நாலாப்புறமும் குழப்பமும், கூச்சலும் எழுந்து கொண்டிருந்தன. குறிப்பாக அஹ்ராரிகள் குழப்பத்தை உருவாக்குவதற்காகத் தம் முழு ஆற்றலையும் பிரயோகித்தார்கள். அஹ்மதியத்தை பூமியை விட்டே துடைத்தெறிந்து விடுவோம் என்பதே அவர்களின் முழக்கமாக இருந்தது. காதியானுடைய பெயரையும் அடையாளத்தையும் அழித்து விடுவோம்; காதியானை நிர்மூலமாக்கி விடுவோம் என்றெல்லாம் பேசப்பட்டது. எந்த அளவுக்கென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் அருளுக்குரிய மண்ணறை மற்றும் புனித இடங்களை அவமதிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அரசாங்கம் சார்பாகவும், எதிரிகள் சார்பாகவும் அதிகமாக கண்காணிக்கப்பட்டு வந்தது. அப்போது ஆங்கிலேய ஆட்சி இருந்த போதிலும் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பதிலாக அவர்களுக்கு ஆதரவு கொடுக்கப்பட்டு வந்தது. அந்த சூழ்நிலையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஜமாத்துக்கு முன்னால் ஒரு திட்டத்தை எடுத்து வைத்தார்கள். அதில் பொருள் தியாகத்தின் பக்கமும் கவனமூட்டினார்கள். இது 1934 ஆம் ஆண்டு நடந்த விஷயங்களாகும். சில சமயங்களில் நீண்ட காலம் வரை தியாகங்கள் செய்ய வேண்டியது வருகிறது. பெண்களும் குழந்தைகளும் அதற்காக ஆயத்தமாக வேண்டிய தேவை வருகிறது. இது ஆண்களுடைய வேலை மட்டுமின்றி பெண்களும் தம் பொறுப்புகளைப் புரிய வேண்டியது உள்ளது என்று அன்னார் கூறினார்கள்.

இத்திட்டம் அப்போது ஒவ்வோர் அஹ்மதியின் மீதும் வலியுறுத்தப்படவில்லைதான்! ஆயினும் கலப்பற்ற தன்மை மற்றும் நன்றி உணர்வின் அசாதாரண உணர்வை ஜமாஅத் வெளிப்படுத்தியது. எவ்வாறிருப்பினும் 1934 ஆம் ஆண்டு அன்னார் முறையாக ஒரு சந்தா திட்டத்தை அறிவித்தார்கள். எதிரிகளுடைய சதித்திட்டங்களுக்கு நாம் பதிலடி கொடுக்க வேண்டும் என்று அன்னார் கூறினார்கள்.

அன்னார் அப்போது ஜமாஅத்திற்கு முன் ஒரு திட்டத்தை எடுத்து வைத்தார்கள். அதில் சுயசீர்திருத்தம் மற்றும் தியாகங்களின் தரத்தை உயர்த்துவது போன்ற விஷயங்களின்

பக்கம் கவனமூட்டப்பட்டிருந்தது. அத்துடன் பொருள் தியாகத்தின் பக்கமும் கவனமூட்டப்பட்டிருந்தது. அக்காலத்தில் பங்கெடுத்தவர்கள் தம்முடைய மற்றும் தம் பிள்ளைகளுடைய வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி தியாகங்கள் செய்து ஜமாஅத்தில் முன்னுதாரணங்களை நிலைநாட்டினார்கள். அல்லாஹ் அதை எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டான் என்றால், உலகில் தப்லீகிற்கான அசாதாரண வழிகள் திறந்தது மட்டுமின்றி இந்தத் தியாகங்கள் அம்மக்கள் வரை மட்டுமே நின்று விடாமல் இன்றும் தொடர்கிறது.

எவ்வாறிருப்பினும் பொருள் தியாகம் செய்த அம்மக்கள் மார்க்கத்திற்காகவும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். தொலைதூரத்தில் உள்ள நாடுகளுக்கெல்லாம் தப்லீக்காக சென்றார்கள். அவர்களில் சிலருக்கு சிறைவாசத்தின் துன்பங்களையும் பொறுத்துக் கொள்ள நேர்ந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஆரம்ப காலத்தில் இந்தத் திட்டத்தை 10 வருடத்திற்கு மட்டுமே நீட்டித்தார்கள். முதலில் மூன்று வருடமாக இருந்தது. பிறகு 10 வருடமாக அதிகரித்தார்கள். 10 வருடங்கள் முழுமையாகி அதனுடைய நல்விளைவுகள் வெளிப்பட்ட பிறகு, தியாகம் செய்தவர்களின் விருப்பத்தையும் கருத்தில் கொண்டவாறு அதனுடைய காலக்கெடுவை அதிகரித்தார்கள். பிறகு இது நிரந்தரமான திட்டமாக ஆகிவிட்டது.

இன்று நாம் அல்லாஹ்வுடைய உதவி, ஒத்தாசையின் காட்சிகளைக் காண்கிறோம் என்றால், இது அந்த ஆரம்பகால மக்களுடைய தியாகங்களின் விளைவே ஆகும். அதை அல்லாஹ் ஏற்றுக்கொண்டான். இன்னும் கூறுவதென்றால், இப்பொழுதும் புதிதாக இணையக்கூடியவர்களுக்கு சில சமயங்களில் கனவுகளின் மூலமாக இந்தத் திட்டத்தில் இணைந்து பொருள் தியாகம் செய்வதன் பக்கம் கவனமூட்டப்படுகிறது. ஆரம்பகால தியாகத்தில் பங்கெடுத்தவர்களின் சந்ததிகள் இன்று தம் முன்னோர்களின் தியாகங்களை நினைவு கூர்ந்தவாறு தாமும் தியாகத்தில் பங்கெடுத்தவாறு, தமது சந்ததிகளிடத்திலும் தியாகத்தின் இந்தத் தொடரை தொடரச் செய்வதற்காக முயற்சி செய்ய வேண்டும். அதேபோன்று தம்மீதுள்ள அல்லாஹ்வுடைய அருள்களைக் கருத்தில் கொண்டவாறு தாமும் அதிகமான அளவில் தியாகங்கள் செய்ய வேண்டும்.

முதல் பதிவேட்டு அலுவலகத்தில் பங்கு பெற்ற முஜாஹிதுகளுக்கு பத்து வருடம் பூர்த்தியான போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இரண்டாம் பதிவேட்டை அறிவித்தார்கள். பிற்காலத்தில் வந்த மக்கள் அதில் சேர்ந்து கொண்டார்கள். அதனுடைய காலக்கெடுவாக 19 ஆண்டுகளை அன்னார் நிர்ணயித்தார்கள். இனிமேல் இந்த பதிவேடு 19 வருடத்திற்கு ஒருமுறை ஏற்படுத்தப்பட்டுக்கொண்டே செல்லும் என்று கூறினார்கள். 19 வருடங்களுக்கு பிறகு அடுத்த பதிவேடு ஆரம்பமானது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, மூன்றாம் பதிவேட்டை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஆரம்பித்தார்கள். 1964 ஆம் ஆண்டே 19 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டதுதான்! ஆனால் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக அந்நேரத்தில் அதை அன்னார் அறிவிக்கவில்லை. ஆகவே ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அதை அறிவித்தார்கள். ‘இப்போது இதற்கான அறிவிப்பை நான் செய்கிறேன்தான்! ஆனால் இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சார்பாக செய்யப்படுகின்றது. அல்லாஹ் எனக்கும் இதற்கான நற்கூலியை தருவானாக’ என்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறினார்கள். 1966 ஆம் ஆண்டு இது அறிவிக்கப்பட்டது. 1965 நவம்பர் முதலே இது ஆரம்பமாகிவிட்டதாக அன்னார் அறிவித்தார்கள். பிறகு 1985 ஆம் ஆண்டில் நான்காம் பதிவேடு துவங்கியது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இந்த வகையில் 19 ஆண்டுகள் கடந்த பிறகு 2004 ஆம் ஆண்டு இந்த காலக்கெடு முடிந்தவுடன் ஐந்தாம் பதிவேட்டை நான் ஆரம்பித்து வைத்தேன். இன்று 19 ஆண்டுகள் பூர்த்தியாகி ஆறாம் பதிவேட்டை நான் அறிவிப்பு செய்கிறேன்.

புதிதாக இணையக்கூடியவர்கள், புதிதாக பிறக்கக்கூடிய குழந்தைகள் அல்லது முந்தைய பதிவேட்டில் இணையாதவர்கள் ஆறாம் பதிவேட்டில் இணைவார்கள்.

இப்போது நான் தஹ்ரீகே ஜதீதின் கனிகளைக் குறித்து எடுத்துக் கூறுகிறேன். ஆரம்ப காலத்தில் நாம் காதியானை விட்டு வெளியே வரவில்லை. அல்லது இந்தியாவுக்குள் சிறிதளவு நாம் பரவியிருந்தோம். ஆனால், இப்போது உலகின் 220 நாடுகளில் 9300 ஐயும் விட அதிகமான பள்ளிவாசல்கள் நமக்குள்ளன. 3400 ஐயும் விடவும் அதிகமான மிஷன் ஹவுஸ்கள் உள்ளன. இப்போது பல டஜன் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன; மிஷன் ஹவுஸ்களும் கட்டப்பட்டு வருகின்றன. முபல்லிக்கள் மற்றும் முஅல்லிம்கள் ஆகியோரின் எண்ணிக்கை உலகம் முழுவதிலும் ஏறக்குறைய 5000 ஐ நெருங்கி விட்டது. இந்த எண்ணிக்கை இப்போது அதிகரித்து வருகின்றது. அல்லாஹ்வின் அருளால் 77 மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்யப்பட்டு விட்டது. நூல்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. பல்வேறு மொழிகளில் ஜமாஅத்தினுடைய நூல்கள் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்படுகின்றன. தஹ்ரீகே ஜதீதின் துவக்கத்துடன் எண்ணற்ற பணிகளும் துவங்கியிருந்தன. இப்போது மற்ற சந்தாக்களும் இதில் இணைந்து விட்டனதான். ஆனால் (இப்பணிகளில்) தஹ்ரீகே ஜதீதுடைய மிகப்பெரும் பங்களிப்பும் உள்ளது.

தஹ்ரீகே ஜதீதுடைய 89 ஆம் ஆண்டு 31 அக்டோபரோடு முடிவடைந்து விட்டது. இப்போது 90 ஆவது ஆண்டில் நாம் நுழைந்து கொண்டிருக்கிறோம். இவ்வருடம் அல்லாஹ்வின் அருளால் உலகளாவிய ஜமாஅத்துக்கு 17.20 மில்லியன் பவுண்டு பொருள் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ்! இது கடந்த வருடத்தை விட 7 லட்சத்து 49 ஆயிரம் பவுண்ட் அதிகமாகும்.

மொத்த வசூலைப் பொறுத்தவரை பாகிஸ்தான் இல்லாமல், முதல் பத்து இடங்களில் உள்ள நாடுகள்; ஜெர்மனி முதல் இடத்தில் உள்ளது. அதற்குப் பிறகு பிரிட்டன், கனடா, அமெரிக்கா, மத்திய கிழக்கில் உள்ள ஒரு நாடு, **இந்தியா**, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, மத்திய கிழக்கில் உள்ள ஒரு நாடு, 10 ஆம் இடத்தில் கானா உள்ளது.

இந்தியாவின் முதல் 10 மாநிலங்கள்: முதல் இடத்தில் கேரளா உள்ளது. **பிறகு தமிழ் நாடு**, கர்நாடகா, தெலுங்கானா, ஜம்மு காஷ்மீர், ஒடிஷா, பஞ்சாப், பெங்கால், டில்லி, மகாராஷ்டிரா.

தியாகத்தின் அடிப்படையில் முதல் 10 ஜமாஅத்துகள்: **கோயம்பத்தூர் (தமிழ் நாடு)**, காதியான், ஹைதராபாத், காலிகட், மஞ்சேரி, **மேலப்பாளையம்**, பெங்களூர், கல்கத்தா, கருளாயி, கேரங்.

**தியாகம் செய்யக்கூடிய இந்த அனைவரின் செல்வத்திலும் உயிரிலும் அல்லாஹ் பரக்கத்தை வழங்குவானாக! இவர்கள் முன்பை விட அதிகமாகத் தியாகங்கள் செய்யக் கூடியவர்களாக ஆவார்களாக!**

**பாலஸ்தீனியர்களையும் எப்பொழுதும் நீங்கள் துஆக்களில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; அவர்களை மறந்து விடாதீர்கள்! பெண்களும் குழந்தைகளும் உச்சகட்ட அநீதியில் நசுக்கப்படுகிறார்கள். அல்லாஹ் விரைவில் அவர்களின் விடுதலைக்கான வழிவகைகளை செய்வானாக!**

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ
يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)